புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# திருப்பூர் மாவட்டத்தில் கன்னார் குல மக்களின் சடங்கு முறைகள்

*திருமதி த.திவ்யா (ஆய்வாளர்),*
*அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர்*
*உயர்கல்வி நிறுவனம், கோவை - 641 043.*
*முனைவர் க.கலாவதி (நெறியாளர்),*
*தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு)*
*அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர்*
*உயர்கல்வி நிறுவனம், கோவை - 641 043.*

*ஆய்வுச்சுருக்கம்*

*இனக்குழு வாழ்க்கை முறை சமுதாய வாழ்க்கை முறையாக மேலோங்கிய நிலையில் மக்கள் தங்களுக்கென பழக்கவழக்கங்களைப் பின்பற்றி வாழத் தொடங்கினார். மொழியறிவோடு நாகரிக வளர்ச்சிப் பெற்றுத் தொழில் அடிப்படையில் அவர்களுக்குள்ளே பிரிவுகளை உருவாக்கிக் குழுவாக வாழ்ந்து வந்தனர். இக்குழு சமுதாயம், குலம், கூட்டம் என அழைக்கப்பட்டது. தொழில்களின் அடிப்படையில் இனங்கள் பிரிக்கப்பட்டிருக்கலாம். ஒவ்வொரு சமுதாயமும் அவர்களின் தொழில், குலம், கோத்திரம் இவற்றைக் கொண்டு வாழ்க்கையைச் செம்மையாக நடத்தி வருகின்றனர். அவ்வகையில் திருப்பூர் மாவட்டத்தில் வாழ்ந்து வரும் கன்னார் சமுதாய மக்களின் சடங்கு முறைகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

*கலைச்சொற்கள்*
*விஸ்வகர்மா, பெண் ருதுவான சீர், திருமணச் சடங்குகள், இறப்புச் சடங்குகள், நிலை நிறுத்துதல்*

*(கன்னார் சமுதாயம்) விஸ்வகர்மா*

*கன்னார் சமுதாயம் விஸ்வகர்மா இனத்தின் ஒரு பிரிவாகும். உலகத்தை உருவாக்கியவர் ஸ்ரீ விராட விஸ்வகர்மா பரப்பிரம்மாவாகும் என்று இவ்வின மக்கள் கூறுகின்றனர். இத்தெய்வத்திற்கு ஐந்து முகங்கள் உள்ளன என்றும் இவை விஸ்வகர்மா இனப்பிரிவுகளைக் குறி;ப்பதாகவும் விஸ்வபிரம்ம புராணம் கூறுகிறது.*

| | | |
|---|---|---|
| *சத்தியோஜாத முகம்* | - | *ரிக்வேதம்* |
| *வாம தேவ முகம்* | - | *யஜூர் வேதம்* |
| *அகோர முகம்* | - | *சாம வேதம்* |
| *சத்புருசம்* | - | *அதர்வண வேதம்* |
| *ஈசானி* | - | *பிரணவ வேதம்* |

*இவ்வைந்து வேதங்களை அடிப்படையாகக் கொண்டும், ஐந்து திருமுகங்களிலிருந்தும் முறையே மனு, மயன், த்வஷ்டா, சில்பி, விசுவக்ஞன் (தட்டார்) எனும் ஐவரை விஸ்வகர்மாவின் சீடர்களாக இறைவன் படைத்தான். மேலும், உலக சிருஸ்டி கர்த்தாவான விஸ்வகர்ம பரப்பிரம்மத்தின் சத்யோஜாதம் என்ற கிழக்கு நோக்கிய முகத்தில் அறிவு விளக்கம் மிகுந்த ருத்ர ரூபமுடைய சானகரி - என்ற மய விஸ்வகர்மாவும் அகோரம் என்னும் மேற்கு நோக்கிய முகத்தில் பிரம்ம ரூபமுடைய அபுவனரி என்ற துவஷ்ட விஸ்வகர்மாவும் த்புரும் என்னும் வடக்கு நோக்கிய முகத்தில் இந்திர ரூபமுடைய பிரத்தனஸரி என்ற சில்பி விஸ்வகர்மாவும் ஈசானி என்னும் ஆகாயத்தை நோக்கிய முகத்தில் சுரிய ரூபத்தில் சுபர்னஸரி என்ற விஸ்வக்ஞ விஸ்வகர்மாவும் தோன்றினர்1 என்பார். உற்பத்தித் தொழில் அனைத்திற்கும் அதிபதியாகவும்*

மூலமாகவும் தோன்றியவர்கள் என்பதால் விஸ்வகர்மா எனப்பெயர் பெற்றதாக வேதபுராணங்கள் கூறுகின்றன. இம்முறையில்,

மனு விஸ்வகர்மா - கொல்லர்
மய விஸ்வகர்மா - தச்சர்
துவஷ்ட விஸ்வகர்மா - கன்னார்
சில்பி விஸ்வகர்மா - கல் தச்சர் (சிற்பி)

விஸ்வகர்மா என்று அழைக்கப்படும் இவ்வினத்தின் நான்கு உட்பிரிவுகளில் துவஷ்ட விஸ்வகர்மாவைச் என்று அழைக்கப்படும் கன்னார் சமுதாய இன மக்களின் சடங்கு முறைகளைக் கள ஆய்வின் மூலம் ஆராயப்பட்டுள்ளது. விஸ்வக்மா இன மக்களை அவர்கள் செய்யும் தொழிலைக் கொண்டு,

மனு விஸ்வகர்மா - இரும்பு வேலை செய்பவர்
மய விஸ்வகர்மா - மரவேலை செய்பவர்
துவஷ்ட விஸ்வகர்மா - வெண்கல வேலை செய்பவர்
சில்பி விஸ்வகர்மா - கல் வேலை செய்பவர்
விஸ்வக்ஞ விஸ்வகர்மா - பொன் வேலை செய்பவர்

என இவ்வாறு பிரித்துள்ளனர். திருப்பூர் மாவட்டத்தில் இன்றும் துவஷ்ட விஸ்வக்மாவைச் சார்ந்த கன்னார் சமுதாய இன மக்கள் வெண்கலம், செம்பு போன்ற மூலப்பொருட்களைக் கொண்டு தொழில் செய்வதைக் காண முடிகிறது. அதனால்தான் வெண்கலக் கன்னார் என்ற சிறப்புப் பெயர் இச்சமூகத்திற்கு இருப்பதை அறிய முடிகின்றது.

சடங்குகள்

சடங்கு என்பது சமயம் அல்லது மரபு வழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட குறிப்பிட்ட செயல் முறைகளின் தொகுப்பு எனலாம். இச்செயல்பாடுகள் மனிதன் அல்லது சமுதாய நலன் கருதிச் செய்யப்படுகின்றன.

சமூக அமைப்பு ஓர் ஆலமரம் என்றால் அதன் ஆணிவேர் நம்பிக்கையாகும். அந்நம்பிக்கையை வலுப்படுத்துகின்ற சடங்குகளும், பழக்க வழக்கங்களும் அம்மரத்தின் விழுதுகள் ஆகும். இன்றும் இப்பழக்க வழக்கங்களை அவ்வாறே சில மாற்றங்களுடன் கடைப்பிடித்து வருகின்றோம். பிறப்பு முதல் இறப்பு வரை உள்ளச் சடங்குகள் சில ஒற்றுமை வேற்றுமைகளுடன் இன்றும் மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவ்வகையில் கன்னார் இனமக்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகளை நேர்காணல் மூலம் அறியப்பட்டு தொகுத்து கொடுக்கப்பட்டுள்ளது.

வளைகாப்புச் சடங்கு

தாய்மைப் பேறு என்பது கிடைத்தற்கரிய பேறாகும். ஒரு பெண் தாய்மையடைந்து கருவுற்றதும் அச்செய்தியினை முதலில் அப்பெண்ணின் பிறந்த வீட்டிற்குத் தெரிவிப்பார்கள். செய்தியறிந்த பெண் வீட்டாரும் உறவினர்களும் வெற்றிலை, பாக்கு, பூ மற்றும் இனிப்பு வகைகளுடன் கருவுற்றப் பெண்ணைப் பார்த்து வருவர். கருவுற்றப் பெண்ணை 7 அல்லது 9 வது மாதத்தில் நல்ல நாள் பார்த்து வீட்டிற்கு அழைத்துச் செல்வர்.

முதல் பிரசவமாக இருந்தால் கருவுற்றப் பெண் தனது பிரசவத்தை எண்ணி மிகவும் கலக்கமுற்றிருப்பாள். தாய் வீட்டில் அவளுக்கு வேண்டிய ஆறுதல் கிடைக்கும் என்பதால்தான் பெண்ணை தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்கின்றனர். அதாவது அம்மா, பெரியம்மா, சித்தி போன்றோர் தங்களின் அனுபவத்தை எடுத்துக் கூறி அவளுக்கு தைரியமூட்டுவார்கள்.

வளைகாப்புச் சடங்கினைத் தொடங்குவதற்கு முன் மஞ்சள் பொடியால் பிள்ளையார் பிடித்து அதன் முன்னால் வளைகாப்பிற்குரியப் பொருட்களை வைத்து வணங்கி, பின் பெண்ணிற்குச் சுமங்கலிப் பெண்கள் வளையல்களை அணிவிப்பர். நாங்கள் உனக்கு பிரசவ நேரத்தில் துணையாக இருப்போம் என்று கூறும் வகையில் உற்றார் உறவினர் வளையல் அணிவிப்பதாகக் கூறுகின்றனர். இடையூறின்றிப் பிள்ளைப் பெறுவதற்கு பிள்ளையார் திருவருள் கிடைக்கவே இப்பழக்கம் வந்ததாகக் கன்னார் சமுதாய முதியவர்கள் நேர்காணலின் போது தெரிவித்தனர்.

*வளையல்களை அணிவித்தப் பின்னர் பெண்ணின் அத்தை அவளுக்கு ஆராத்தி எடுத்து நெற்றியில் திலகமிட்டு வாழ்த்துவார். பின்னர் தக்காளி, எலுமிச்சை, புளி, தேங்காய், தயிர் சோறு என ஐந்து விதமான சுவையான கட்டுச் சோற்று உணவினைப் பெண்ணுக்கும் உறவினர்களுக்கும் பரிமாறுவர். கட்டுச்சோறு விருந்து முடிந்த பின் திசைகளின் சூலம் பார்த்து அத்திசைக்கு எதிர் திசையில் பெண்ணைத் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். பெண்ணுக்கு கண்ணேறு கழித்து வீட்டிற்குள் அழைத்துச் செல்கின்றனர். பெண் கருவுற்ற மூன்றாம் மாதத்திலிருந்து மசக்கை என்னும் சோர்வு, வாந்தி, மயக்கம் போன்ற மாற்றங்கள் உடலில் ஏற்படும். அதற்கு ஓய்வெடுக்கும் பொருட்டும் தான் விரும்பிய உணவு வகைகளை தாயிடம் கேட்டு உண்பதற்காகவும் தாய் வீட்டின் இதமான சூழ்நிலை பெண்ணின் கரு வளர்நிலைக்கு ஏதுவாக அமையும் என்பதால் தாய்வீட்டிற்குச் செல்வதாகக் கூறுகின்றனர்.*

*குழந்தை பிறப்பு*

*குழந்தை பிறந்தவுடன் தொப்புள் கொடியை அகற்றி அந்த இடத்தில் மஞ்சள் பொடியை வைத்து வெள்ளைத் துணியால் மூடி வைப்பர். பிறகு சர்க்கரை அல்லது தேன் கலந்த நீரைக் குழந்தையின் நாக்கில் தொட்டு வைப்பர். இதற்கு சேனையூட்டல் என்று பெயர் குழந்தை இவ்வுலகில் நீண்ட காலம் இன்பமாக வாழ வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும், குழந்தைக் கொடுக்கப்படும் முதல் உணவு என்பதாலும் முதலில் கொடுக்கப்படுகின்ற மருந்துப் பொருளாகவும் இது விளங்குவதால் சேனை என்ற பெயர் வந்திருக்கலாம் எனவும் கூறுகின்றனர். (சேனை – பாதுகாப்பு)*

*கருகுமணியிடுதல்*

*குழந்தை பிறந்து பதினைந்தாம் நாளில் கருகுமணியிடுதல் சடங்கு நடைபெறும். குழந்தையின் கழுத்தில் கருகுமணி, பால்மணி, கைகளில் கருப்பு வளையல் அணிவித்தலே கருகுமணி இடுதல் ஆகும். வசம்பு, பூண்டு, மிளகு ஆகியவற்றைத் துணியில் முடிந்து குழந்தையின் கையில் கட்டுவர். வசம்பு பால் அருந்திய குழந்தைக்கு ஏற்படும் வாந்தியைத் தடுக்கும், கருகுமணி இருள் அச்சத்தைப் போக்கும், தீய ஆவிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் என்ற நம்பிக்கை இம்மக்களிடையே நிலவி வருகின்றது.*

*தொட்டில் சீர்*

*குழந்தை பிறந்த பிறகு இரண்டு மாதம் வரை தாய் வீட்டில் இருக்கும் பெண்ணும் குழந்தையும் மூன்றாம் மாதத்தில் கணவன் வீட்டிற்கு வந்தவுடன் தொட்டில் சீர் நடைபெறும் புதுத் தொட்டிலில் குழந்தையைத் தூங்க வைப்பர்.*

*பெயர் சூட்டுதல்*

*பெற்றோர் விரும்பிய பெயரை வயதில் மூத்தப் பெரியோர் முதன் முதலில் குழந்தையின் காதில் பெயரை மூன்று முறை உரக்கக் கூற, மற்றவர்கள் அதே முறையில் குழந்தையின் நெற்றியில் பணம் வைத்துப் பெயர் சொல்லி அழைப்பர். மொட்டையடித்தல், காதுகுத்தல் போன்ற சடங்குகளையும் பிற இன மக்களைப் போன்று தாய்மாமனைக் கொண்டு நிகழ்த்துகின்றனர்.*

*பெண் ருதுவான சீர் (பருவமடைதல்)*

*பெண் வயதுக்கு வந்ததும் தாய்மாமனுக்கு முதலில் செய்தி சொல்லி அனுப்ப அவர் வந்ததும் தண்ணீர் உற்றும் சீர் செய்யத் தொடங்குவர். முக்காலியில் அமர வைத்திருக்கும் பெண்ணின் தலையில் நல்லெண்ணெய் வைத்து மஞ்சள் கலந்த நீரை மூன்று முறை ஊற்றுவார். அவரைத் தொடர்ந்து பெண்கள் அவளை குளிக்க வைத்து அலங்காரம் செய்து தாய்மாமன் கட்டிய குடிசைக்குள் பெண்ணை அமர வைப்பர்.*

*பெண்ணின் பெற்றோர்கள் தாய் மாமனை வணங்கி வரவேற்று இச்சீரினைச் சிறப்பாகச் செய்து தருமாறு வேண்டிக் கொள்வர்கள். அதன் பிறகே வேப்பந்தழைகளைக் கொண்டு குடிசை அமைத்து அதனுள் பெண்ணை ஏழு நாட்கள் இருக்கச் செய்வர். ஏழு நாட்கள் கழித்து தாய்மாமன் கொழுக்கட்டை விருந்து கொடுப்பார். மணப்பெண் வீட்டில் எத்தனையாவது பெண்*

என்பதற்கேற்ப வந்திருக்கும் உறவினர்களுக்கு அவ்வெண்ணிக்கையில் கொழுக்கட்டைகள் கொடுப்பது சிறப்பிற்குரியதாகும்.

பெண் பருவமடைந்த நாள் முதல் மாமா உறவுடையவர்கள் அக்கம் பக்கத்தினர் பல வகையான இனிப்பு வகைகள், பனங்கருப்பட்டி, அசைவ உணவு போன்றவற்றை மூன்று வேளையும் கொடுத்து உண்ண வைப்பர். ஏழு நாட்கள் கழித்து சீர் செய்வார்கள். தாய்மாமன் 5 தட்டுகளில் சீர்வரிசைப் பொருட்களை மேள தாளத்துடன் எடுத்து வருவார். தாய்மாமன் கொண்டு வந்த பட்டுப்புடவை, நகை இவற்றை அணிவித்து அலங்காரம் செய்து மேடையில் அமர வைத்து அனைவரும் நலங்கு வைத்து பெண்ணை வாழ்த்துவார்கள். சீர் முடிந்த மறுநாள் பந்த கிடா விருந்து நடைபெறும்.

### திருமணச் சடங்குகள்

ஆண், பெண் இருவரும் ஒரு நல்ல நாளில் இணைந்து இல்லறத்தில் ஈடுபட்டு தங்களுக்கென்று சந்ததியினை உருவாக்கிக் கொள்ளும் ஓர் அற்புத நிகழ்வே திருமணமாகும். இச்சமூகத்தினர் தங்கள் உறவுகளுக்குள்ளே பெண் கொடுத்து பெண் எடுக்கும் வழக்கத்தைப் பின்பற்றினர். அதாவது மாமன் மகள், அத்தை மகன் எனத் திருமணம் செய்யும் வழக்கம் இருந்து வந்தது. அதனால் ஜாதகம் பழக்கம் இச்சமூகத்தினரிடம் இல்லை. அவரவர் குலத்தெய்வத்திடம் பூ கேட்டு திருமணத்தை நிகழ்த்தினர். ஆனால் கால மாற்றங்களால் இன்று ஜாதகம் பார்க்கும் பழக்கம் இச்சமூகத்தில் இல்லை.

### முகூர்த்தக்கால் நடுதல்

கன்னார் சமூகத்தின் திருமணச் சடங்குகள் இந்நிகழ்வு முக்கியமான சீராகும். முதலில் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து தேங்காய், பழம், பூ, சந்தனம், குங்குமம் போன்ற மங்கலப் பொருட்களை வைத்து விளக்கேற்றி விநாயகருக்கு முதல் வணக்கத்தைச் செலுத்தி பேய்க் கரும்பு, பாச்சாங்கோல், அரச இலை இவற்றைப் பிள்ளையாருக்கு முன் படைத்து பஞ்ச பூதங்களை ஒருங்கிணைத்து மந்திரிக்கப்பட்ட கங்கணத்தை பாச்சாங்கோலில் கட்டுவார்கள்.

பிறகு நவக்கிரகங்களை உள்ளடக்கிய நவதானிய முடிச்சட்டத் துணியை பாச்சாங்கோலில் கட்டி முக்கோடி தேவர்களை அழைத்து குலம் கோத்திரம் சொல்லி அதாவது துவடாச்சாரியார் - குலம், அபுகவனரிசி - கோத்திரம், போதாயான - சூத்திரம் மற்றும் காயத்ரி தேவியை வணங்கி, ஆதி விஸ்வகர்மாவே! இத்திருமணத்தைச் சீரோடும் சிறப்போடும் நடத்தித் தர வேண்டும் என்று வேண்டிக் கொண்டு மணமேடையின் ஈசான்ய மூலையல் சாலும் கரகப்பானைக்கு அருகில் கட்டி வைப்பார்கள். மணமேடையில்

| | | |
|---|---|---|
| கிழக்கு மூலையில் | - | இந்திரன் |
| தென் கிழக்கு | - | அக்கினி |
| தெற்கு | - | ருத்திரன் |
| தென் மேற்கு | - | கன்னி |
| மேற்கு | - | வருணன் |
| வட மேற்கு | - | வாயு |
| வடக்கு | - | குபேரன் |
| வட கிழக்கு | - | சிவன் |

இவற்றின் நடுவில் பிரம்மன் இருப்பதாக நம்புகின்றனர். மேலும் சாலும் கரகப்பானையுடன், உரல் ஒன்று உலக்கை மூன்று என இப்பொருட்களுக்கும் கங்கணம் கட்டிப் பூசை செய்கின்றனர்.

### முளைப்பாரி வளர்த்தல்

திருமணநாள் முடிவானதும் பதினொரு நாட்களுக்கு முன்னர் மணப்பெண் முளைப்பாரிட்டு வளர்ப்பாள். இதற்கு முளைப்பாரி வளர்த்தல் என்று பெயர். இது செழிப்படன் வளர வேண்டும் என்றே பெண்கள் விரும்புவர். திருமணத்தின் போது மணமேடையில் ஹோமக் குண்டத்தைச் சுற்றி முளைப்பாரிச் சட்டி வைக்கப்பட்டிருக்கும் 9,11 அல்லது 13 என்ற ஒற்றை எண் கொண்ட சிறிய அளவிலான மூடியுடன் கூடிய மண்பானைகளில் வளர்ந்துள்ள முளைப்பாரியைக் கிள்ளி ஒவ்வொரு பானைக்குள்ளும் இட்டு மீதமுள்ள முளைப்பாரியை ஒரு மண்குடத்திலிட்டு

மஞ்சள் நீரை ஊற்றி வைப்பர். நாகவல்லி சீர் முடிந்தவுடன் மணமகள் அவ்வூரில் உள்ள கிணற்றுக்குள் முளைப்பாரியைப் போட்டு வணங்குவாள்.

முகச்சவரம் செய்தல்

மாப்பிள்ளை பெண் வீடு வந்த பிறகு அவரை மணமேடையில் அமரச் செய்து நாவிதர் முகச்சவரம் செய்வார். மாப்பிள்ளைக் குளித்தப்பின் நலங்குச் சீர் நடைபெறும் மஞ்சள், பாசிப்பயிறு மாவு, எண்ணெய் ஆகியவற்றைக் கொண்டு சீரைச் செய்கின்றனர்.

சாலும் கரகப்பானையும் எடுத்து வருதல்

சாலி வாகனன் வம்சாவழியாகிய உடையார் அச்சால் கரகப் பானைக்கு உயிரூட்டிக் கொடுப்பார். பின்னர் சலவைக்காரரிடம் மாத்துப் பெறுவார். ஒரே புடவையில் மூன்று சும்மாடு செய்து மூன்று பெண்களின் தலைகளில் வைத்து கரகப்பானையை அதன் மீது வைத்து மேல் மாத்து, கீழ் மாத்து விரித்துத் தீப்பந்தம் ஏந்தி முகூர்த்த மேடைக்கு எடுத்து வருவார்கள். பானையைச் சுமந்து வந்த பெண்கள் மணமேடையின் ஈசான்ய மூலையில் கொட்டி வைத்திருக்கும் மண்குவியல் மீது வைப்பர். இம்மூன்று பானைகளிலும் முதலில் பெரிய பானையில் தண்ணீரும் பிறகு சிறிய பானையில் நெல்லும், வெல்லமும் அடுத்து மிகச்சிறிய பா்யில் பாசிப்பயிறும் வெல்லமும் இவ்வாறு பொருட்கள் இருக்கும் கரகப்பானை எடுத்து வரும் நிகழ்வு பிற இனமக்களின் சடங்கு முறையிலிருந்து மாறுப்பட்டிருப்பதை இந்நிகழ்வின் மூலம் அறிய முடிகிறது.

திருமாங்கல்யம் கட்டுதல்

முக்கோடி முப்பது தேவர்களையும் அக்னியையும் சாட்சியாகக் கொண்டு கெட்டி மேளம் முழங்கப் பெரியோர்களின் வாழ்த்துக்களோடு மாப்பிள்ளை மணப்பெண்ணுக்கு தாலி கட்டுவார். பிறகு பெற்றோர்களுக்குப் பாத பூசை செய்யப்படும்.

இளங்காளை பாக்கு எடுத்தல்

திருமணம் முடிந்த பிறகு இளங்காளை பாக்கு எடுக்கும் நிகழ்வு நடைபெறும். இது நகைச்சுவை சீராகவும் அதே சமயத்தில் மணமகனின் வலிமையைப் பரிசோதிக்கும் சீராகவும் அமைகிறது. வெற்றிலைப் பாக்குடன் கூடிய ஒரு பொட்டலத்தைக் கம்பளிக்கு அடியில் வைத்து அதன் மீது கனத்த உடல் கொண்ட ஒருவர் அமர்ந்து கொள்வார். அப்பொட்டலத்தை மாப்பிள்ளை எப்படியாவது எடுக்க வேண்டும் என்பதே இந்நிகழ்வாகும்.

சமதாடு

சமதாடு என்பது ஒரு கத்தியைச் சிவப்பு நிறத்துணியால் சுற்றி மாப்பிள்ளையின் தோழனான மைத்துனன் மாப்பிள்ளையிடம் கொடுப்பதாகும். நான் என்றும் உங்களுக்கு இதுபோன்று துணையாக இருப்பேன் என்று கூறுவதாக இந்நிகழ்வு அமைகின்றது என்று கூறுகின்றனர்.

சேசை எடுத்தல்

மணமக்களுக்கு அரச இலை பால், நெல் இவற்றைக் கொண்டு சேசை எடுப்பார்க்கள். இச்சீரை முதலில் காரியக்காரர், தீர்ப்புக்காரர், சங்கோதி ஆகியோர் செய்த பிறகே மற்றவர்கள் செய்வார்கள். மும்மூர்த்திகளான சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகியோரை மனதில் கொண்டு அரச இலை, பால், நெல் இவற்றை இடை, தோள்கள், தலையில் வைத்து ஆசி வழங்குவார்கள். மணமேடையை மூன்று முறை வலம் வந்து சூரிய நமஸ்காரம் செய்த பின்பு பால், பழம் கொடுத்து மகிழ்வர். மணமக்கள் குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் வீதி உலா வருவார்கள். திருவீதி உலா முடிந்த பிறகு இருவரையும் மணமேடையில் உட்கார வைத்து கங்கணக் கயிறை அவிழ்க்கின்றனர்.

*குழவிக்கல்லைக் குழந்தையாக்குதல்*

*சமதாடு சுற்றப்பட்ட சிவப்புத் துணியை எடுத்து தொட்டில் போல கட்டி அதில் சிறிய குழவிக் கல்லை குழந்தையாகப் பாவித்து மணப்பெண்ணும், மணமகனும் அத்தொட்டிலை ஆட்டுவார்கள். வயதில் முதிர்ந்த உறவினர்கள் இத்தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பார்க்க முடியுமோ முடியாதோ என்ற ஏக்கத்தைப் போக்கவே இச்சீர் செய்யப்படுவதாகப் பேட்டியாளர் தெரிவித்தார். முகூர்த்தம் முடிந்தவுடன் வழங்கும் உணவுக்குப் பூதக்கால் விருந்து என்று பெயர். இவ்விருந்தின் போது காரியக்காரர், தீர்ப்புக்காரர், சங்கோதி ஆகியோர் மணமேடையில் அமர்ந்து கொண்டு இருவீட்டாரையும் அழைத்து விருந்துக்கு 16 வகையான உணவுகள், ஐந்து வகை பொறியல் மூன்று வகை பாயாசம் போன்றவற்றைச் சமைத்து விருந்தளிக்க வேண்டும் என்று கட்டளைடுயிவார். இருவீட்டாரும் இத்தனை வகை உணவினை எம்மால் செய்ய முடியாது என்று அவர்களிடம் வேண்ட மூவரும் அதற்குச் சம்மதம் தெரிவித்து அனைவரையும் சாப்பிடுமாறு கூறுவர். விருந்து முடிந்ததும் மறுவீட்டு அழைப்பு நடைபெறும். பெண்ணை மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துச் செல்லும் போது சீதனப் பொருட்களைக் கொடுத்தனுப்புவார்கள்.*

*பெரும்பானை தொடுதல்*

*மணப்பெண் புகுந்த வீட்டிற்கு வந்ததும் விளக்கேற்றி இறைவழிபாடு செய்து அரிசி, புளி, உப்பு, மஞ்சள் நிரம்பிய கிண்ணத்தைத் தொட்டு வணங்கச் செய்வர். இதற்குப் பெரும்பானை தொடுதல் என்று பெயர்.*

*மருகல விருந்து (மணம் மிக்க உணவு)*

*மருமகனை மறு வீட்டிற்கு அழைத்து இடியாப்பம், தோங்காய்ப் பால், உளுந்து வடை, பலவிதமான இனிப்புகள் செய்து உண்ண விருந்தளிப்பர். இவ்வாறு திருமணச் சடங்குகள் நடைபெறும் என்பதை பேட்டியாளரின் வழி அறிய முடிந்தது.*

*இறப்பிற்கு முன் நிகழும் சடங்குகள்*

*தாலாட்டுப் பாடலோடு தொடங்கும் மனித வாழ்க்கை ஒப்பாரி பாடலுடன் நிறைவடைகிறது. இறந்தோரின் ஆன்மா சாந்தி அடைந்து மறு உலகில் நிலைபெறவும் அவரது இழப்பால் இன்னலுறும் மக்கள் துக்கத்தை மறந்து அன்றாடக் கடமைகளில் ஈடுபடவும் இறப்புச் சடங்குகள் அனைத்து இவ்வின மக்களால் நிகழ்த்தப்படுகின்றன.*

*இறப்பு நேர்ந்த குடும்பம் தீட்டுப்பட்டதாகக் கருதப்படுகிறது. மரணம் அடைந்தவரின் நெருங்கிய உறவினர்களுக்கும் குறிப்பிட்ட காலம்வரை தீட்டு உண்டு. இத்தீட்டு நீராடுவதால் மட்டும் நீங்கி விடாது. சடங்குகள் மூலமாகவே போக்க முடியும் என ஆன்றோர்கள் கூறுகின்றனர். மனிதன் உயிர் இறப்பை நோக்கி பயணிக்கும் வேளையில் குடும்பத்தார் வாயில் பாலூற்றுவார்கள். இதனால் உயிர் பிரியும் என்றும் இவ்வுலக வாழ்வை விட்டு உயிர் மறு உலகிற்குச் செல்ல ஏதுவாகும் என்ற நம்பிக்கையும் இச்சமுதாய மக்களிடம் காணப்படுகிறது.*

*பால் ஊற்றியும் உயிர் பிரியவில்லை எனில் அவர்கள் வாழ்ந்த வீட்டின் மண்ணையோ அல்லது பொன்னையோ உரசி வாயில் ஊற்றுவார்கள் அதாவது இறக்கும் தருவாயில் இருக்கும் அவருக்கு மண் ஆசையோ, பொன் ஆசையோ இருந்தால் உயிர் பிரியாது என்பதால் அவ்வாசையைப் போக்கவே இதனைச் செய்வதாகக் கூறினார்.*

*இறப்பிற்குப் பின் நிகழும் சடங்குகள்*

*இறந்தவரின் உடலைப் பாய் தலையணை வைத்து உள்ளாடைகளைக் கட்டிய பிறகு கன்னார் இனத்தவரின் கடவுளான காமட்சி அம்மன் உருவம் பதித்த விளக்கேற்றிப் பூசை செய்யப்படுகிறது. இறந்தவரிக் உடலை எடுத்து நிலை நிறத்துதல் என்னும் சீர் செய்யப்படுகிறது. இறந்தவரின் மாமனோ மைத்துனரோ பிணத்தை நிலையாக நிறுத்தி வைப்பார். பிறகு வாசலுக்கு வெளியே விறகுக் குச்சிகளை எரித்து கொள்ளி வைக்கும் நெருப்பினை மூட்டுகின்றனர். இறந்தவர்களின் பங்காளிகள் வரிசையாக நிற்க உறவினர்கள் ஆறுதல் கூறுகின்றனர். இதன் பின்னர் பிற இனத்தவர் போன்றே பிற சடங்குகளைச் செய்கின்றனர்.*

*தொகுப்புரை*

- *சடங்குகளின் வழி ஆராயப்பட்டதில் திருமணத்தின் போது மணப்பெண்ணை தாய்மாமன் தூக்கி வந்து மணமேடையில் அமர வைப்பது,*
- *மணமேடைக்கு அருகில் உரல் உலக்கைகள் மற்றும் சாலும் கரகப்பானையும் வைப்பது,*
- *திருமண நிகழ்வில் குழவிக்கல்லைக் குழந்தையாகப் பாவித்து தொட்டிலாட்டுவது,*
- *மணமக்களுக்கு நாத்தனாரே மெட்டி அணிவிப்பது,*
- *இறந்தவரின் உடலை நிலை நிறுத்துதல் இறக்கும் தருவாயில் உள்ளவருக்கு மண்ணையோ அல்லது பொன்னையோ கரைத்து வாயில் ஊற்றுவது என்பன போன்ற சடங்குகள் பிற இனமக்கள் சடங்குகளிலிருந்து சற்று மாறுபட்டே காணப்படுகிறது என்பதைப் பேட்டியாளர் வழி அறிய முடிந்தது.*

*கன்னார் சமுதாயத்தின் திருமணச் சடங்குகள் காரியக்காரர், தீர்ப்புக்காரர், சங்கோதி ஆகியோரின் தலைமையில்தான் நடைப்பெற்று வந்துள்ளன என்பதும் நோக்குதற்குரியதாகும் ஆனால் இன்று இம்முறை நடைமுறையில் இல்லை என்பதைனையும் அறிய முடிந்தது.*

*கன்னார் சமுதாய இன மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்கு முறைகள் பிற இனத்தவரிடமிருந்து சற்று மாறுப்பட்டதாகவே காணப்படுவதை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.*

*சான்றெண் விளக்கம்*

*1. பா.நளினிப்ரியா, பொற்கொல்லரின் கலையும் வாழ்வியலும், ப : 77*

*தகவலாளர்கள்*

1. *கருப்புசாமி, 62 - பல்லடம்*
2. *பொன்னுசாமி, 42 - அவிநாசி*

*துணைநூல் பட்டியல்*

*1. ஆறுமுகம். ஆ ,நாட்டுப்புற இலக்கியமும் பண்பாடும், தேன் தமிழ் பதிப்பகம், சேலம்,முதல்பதிப்பு (1988)*

*2. தொ.பரமசிவன் - பண்பாட்டு அசைவுகள்,காலச்சுவடு பப்ளிகேஸன்ஸ்(பி)லிட், 669,கே.பி.சாலை, நாகர்கோவில் - 629001. முதல்பதிப்பு (2001)*

*3.தொ.பரமசிவன் - தொ.பரமசிவன் நேர்காணல் காலச்சுவடு பப்ளிகேசன்ஸ்(பி)லிட், 669, கே.பி.சாலை, நாகர்கோவில் - 629001. முதல்பதிப்பு (2019)*

*4. பா.நளினிப்ரியா, பொற்கொல்லரின் கலையும் வாழ்வியலும், முதற்பதிப்பு (2017)வி.கே பப்ளிகேஷன்ஸ், 55 கோபும் காலனி, சிவகாசி - 629124*

********* ********* ********** ********* ********* ********** ********** **********